IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.
C.C.NO.72/2026
DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | MANJUNATHAN |
| FATHER'S NAME | : | SOUNDARRAJAN |
| VILLAGE | : | VEPPUR |
| OCCUPATION | : | SI |
| AGE | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 15th day of JULY 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருவலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 12.03.2026 ம் தேதி காலை 08.00 மணிக்கு நானும், தலைமை காவலர் பார்த்தீபன் மற்றும் முதல்நிலை காவலர் சதீஷ் ஆகியோர் ரோந்து பணி மேற்கொண்டு திருவலம் காவல் நிலையம் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டம் ஒழுங்கு, குற்ற தடுப்பு, மதுவிலக்கு, கஞ்சா மற்றும் குட்கா சம்மந்தமாக கண்காணித்து கொண்டு போகும்போது கிடைத்த தகவலின் பேரில் ஏரந்தாங்கல் பனந்தோப்பு கிராம ஆர்ச்சிடம் சென்று பார்க்க ஒரு நபர் சந்தேகப்படும்படியாக கையில் பையுடன் நின்று கொண்டிருந்தவர் போலிசாராகிய எங்களை கண்டதும் தப்பி ஓட எத்தனித்தவரை நாங்கள் போலிஸ் பார்ட்டி சகிதம் மடக்கி பிடித்த போது அவர் பெயர் விலாசம் பாபு, த/பெ. அப்பாசாமி, ஏரந்தாங்கல், காட்பாடி தாலுக்கா என்று கூறினார். மேலும் அவர் வைத்திருந்த பையை சோதனை செய்து பார்த்தபோது அதில் தலா 180மிலி அளவு கொண்ட BLACK PEARL RUM-08 பாட்டில்கள், GOLDEN EAGLE BRANDY-02 பாட்டில்கள் என மொத்தம் 10 பாட்டில்கள் இருந்தது. அதை பற்றி அவரிடம் விசாரிக்க அரசு மதுபான கடையிலிருந்து ஏற்கனவே வாங்கி வந்து அரசு அனுமதியின்றி தனது சுயலாபத்திற்காக கூடுதல் விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததாக கூறி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். மேற்படி நபரை கைது செய்வதற்கான காரணத்தை கூறி காலை 08.15 மணிக்கு கைது செய்து பின்னர் சம்பவ இடத்தில் தனிநபர்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால் என்னுடன் இருந்த போலிசார் முன்னிலையில் காலை 08.30 மணிக்கு தலா 180மிலி அளவு கொண்ட BLACK PEARL RUM-08 பாட்டில்கள், GOLDEN EAGLE BRANDY-02 பாட்டில்கள் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கு சொத்து மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து அதன் தன்மைபடி நிலைய குற்ற எண் 40/2026, சட்டப்பிரிவு 4(1)(A), 4(1)(C) TNP AMENDMENT ACT ன் படி வழக்கு பதிவு செய்து கொண்டேன். அந்த முதல் தகவல்அறிக்கை **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரியை தக்கவ வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றம் அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சொத்தான 180மிலி அளவு கொண்ட BLACK PEARL RUM-08

பாட்டில்கள் **அ.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 180மிலி அளவு கொண்ட GOLDEN EAGLE BRANDY–02 பாட்டில்கள் **அ.சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் பார்த்தீபன், சதீஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எனது புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது சட்டப்பிரிவு 4(1)(A), 4(1)(C) TNP AMENDMENT ACT படி 12.03.2026 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

இந்த வழ்ககின் புலன் விசாரணை அதிகாரி மற்றும் புகா ர்்தார்ர் நான் ்தான் என்றால் சரிதான். ரோந்து பணி காலை 7 மணிக்கு ஆரம்பித்து 9 மணிக்கு காவல் நிலையம் வந்தோம். எதிரியிடமிருந்து தலா 180மிலி அளவு கொண்ட BLACK PEARL RUM–08 பாட்டில்கள், GOLDEN EAGLE BRANDY–02 பாட்டில்கள் என மொத்தம் 10 பாட்டில்கள் கைப்பற்றினோம். பையை இந்த வழக்கில் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து கைப்பற்றும் போது வீடியோ பதிவு எடுப்பது விதி என்றும், அதுபோல் இந்த வழக்கில் வீடியோ பதிவு எடுக்கவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜர் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. கைப்பற்றுதல் மகஜர் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய மடிக்கணினி மூலமாக தட்டச்சு செய்யப்பட்டது. இந்த விவரத்தை இப்போது தான் முதன் முறையாக சொல்கிறேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தை ரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பவில்லை. எனக்கு கீழ் பணிபுரியும் அதிகாரிகளை வைத்து பொய்யாக வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. சம்பவம் உண்மையில்நடந்திருந்தால் பையை கைப்பற்றி இருப்பேன் என்றும்,சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 15.07.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU

Digitally signed by S K P DILIP BABU
Date: 2026.07.15 17:17:14 +0530

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.